# படிவம் 7

*[13(2) மற்றும் 26–ஆவது விதிகளைப் பார்க்கவும்]*

***வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க ஆட்சேபித்தலுக்கான அல்லது நீக்கக்கோருவதற்கான விண்ணப்பம்***

பெறுநர்
வாக்காளர் பதிவு அதிகாரி,
.......................................................................... சட்டமன்றத் தொகுதி

ஐயா,

@கீழே குறிப்பிட்டுள்ள நபரின் பெயர் மேற்குறிப்பிட்டுள்ள தொகுதிக்கான வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு ஆட்சேபணை தெரிவிக்கிறேன். ஆட்சேபத்திற்கு ஏதுவான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

**(அல்லது)**

@வாக்காளர் பட்டியலில்* எனது பெயர் / *கீழே குறிப்பிடப்பட்டுள்ள நபரின் பெயர் நீக்கப்படுவதற்கு கீழ்க்கண்ட விவரங்களை சமர்ப்பிக்கிறேன்:

| **I @ஆட்சேபணைக்குரிய நபரின் விவரங்கள்: / @பெயர் நீக்கம் செய்யப்பட வேண்டிய நபரின் விவரங்கள்:** | பெயர் | | குடும்பப்பெயர் (ஏதேனுமிருப்பின்) |
|---|---|---|---|
| | | | |
| | வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் சேர்க்கப்பட்டுள்ள பாகத்தின் எண்: | அந்த பாகத்தில் அவரது வரிசை எண்: | வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (வழங்கப்பட்டிருந்தால்) எண்: |

| #II. | **ஆட்சேபிப்பவரின் விவரங்கள்** | பெயர் | குடும்பப்பெயர் (ஏதேனுமிருப்பின்) |
|---|---|---|---|
| | | | |
| | பாலினம் (ஆண்/பெண்/இதரர்):$ | வாக்காளர் பட்டியலில் ஆட்சேபிப்பவரின் பெயர் இடம் பெற்றுள்ள பாகத்தின் எண் | அந்த பாகத்தில் அவரது வரிசை எண் |

| *தகப்பனாரின் / தாயாரின் / கணவரின் பெயர் | பெயர் | குடும்பப்பெயர் (ஏதேனுமிருப்பின்) |
|---|---|---|
| | | |

**III.** @ஆட்சேபணை செய்தவர் / @பெயர் நீக்கம் விரும்புபவர் சாதாரணமாக குடியிருக்கும் இடம் பற்றிய விவரங்கள் (முழுமையான முகவரி)

| | |
|---|---|
| வீட்டு / கதவு எண்→ புதிய: | பழைய: |
| தெரு / பகுதி / இடம் / சாலை : | |
| நகரம் / கிராமம்: | |
| அஞ்சல் அலுவலகம்: | அஞ்சல் குறியீட்டு எண்: |
| வட்டம் / மண்டலம்: | |
| மாவட்டம் : | |

**IV.** ஆட்சேபணைக்கான / நீக்கவேண்டியதற்கான காரணங்கள்:

@ முதலாவது விருப்பத்தேர்வு வாக்காளர் பட்டியல் தயாரிப்பு/திருத்தத்தின் போது பொருந்தக் கூடியது. இரண்டாவது விருப்பத் தேர்வு இறுதிப்பட்டியல் வெளியீட்டிற்கு பின்னர் நடைபெறும் தொடர் திருத்தக் காலத்தில் பொருந்தக்கூடியது. பொருத்தமற்ற மாற்று விருப்பத் தேர்வை அடித்து விடவும்

* பொருத்தமற்றதை அடித்து விடவும்.

\# விண்ணப்பதாரர் தன்னைப் பற்றிய பதிவை நீக்கக்கோருவதாயிருந்தால் பகுதி–IIஐ நிரப்பக்கூடாது

$ தமது பாலினத்தை ஆண் அல்லது பெண் என்று குறிப்பிட விரும்பாத விண்ணப்பதாரர்கள் ''இதரர்'' என்று குறிப்பிடலாம்.

V.உறுதிமொழி

மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் எனக்குத் தெரிந்த வரையிலும், நம்பிக்கைக்கு உகந்த வகையிலும் உண்மை என உறுதி கூறுகிறேன்.

இடம்: நாள்: விண்ணப்பதாரரின் கையொப்பம்/ கைபெருவிரல் அடையாளம்

*குறிப்பு* : எவராவது பொய்யான அல்லது பொய்யானதென்று தாம் அறிந்துள்ள அல்லது நம்புகிற அல்லது உண்மையானதென்று நம்பாத அறிக்கையை அல்லது உறுதிமொழியை கொடுத்தால் அவர் 1950–ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (1950ன் 43) 31வது பிரிவின்கீழ்த் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

* பொருத்தமற்றவைகளை அடித்து விடவும்.

**மேல்நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரங்கள்**
***(தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது)***

திரு / திருமதி / செல்வி ..............................................................பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்த்திருப்பதற்கு ஆட்சேபிப்பவரான / நீக்க விரும்புகிறவரான திரு / திருமதி / செல்வி ..............................................................ன் படிவம் 7ல் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது* / நிராகரிக்கப்பட்டது.*

ஏற்றுக்கொள்ளப்படுதலுக்கான [விதி 18*/20*/26(4) £ –ன்கீழ்] அல்லது நிராகரிக்கப்படுதலுக்கான [விதி 17*/20*26(4) £ –ன்கீழ்] காரணங்கள்:

இடம்:
நாள் :

வாக்காளர் பதிவு அதிகாரியின் கையொப்பம்

(வாக்காளர் பதிவு அதிகாரியின் முத்திரை)

* பொருத்தமற்றதை அடித்து விடவும்.

£ வாக்காளர் பட்டியல் இறுதி வெளியீட்டிற்குப் பின்னர் நடைபெறும் தொடர்திருத்தத்தின்போது .

---

**கள அலுவலர் (வாக்குச் சாவடி நிலை அலுவலர், நிர்ணயிக்கப்பட்ட அலுவலர், மேற்பார்வை அலுவலர்) – களின் குறிப்புகள்**

## படிவம் பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகை

திரு./திருமதி/செல்வி**..................................................................................................இடமிருந்து படிவம் 7 பெற்றுக் கொள்ளப்பட்டது.
** முகவரி..................................................................................................................................

நாள்.........................................

வாக்காளர் பதிவு அதிகாரி சார்பில் படிவம்
பெற்றுக் கொண்ட அதிகாரியின் கையொப்பம்

(முகவரி) .......................................................................................................................

** விண்ணபதாரரால் நிரப்பப்படவேண்டும்

---

## படிவம் 7—ஐ நிரப்புவதற்கான வழிமுறைகள்

பொதுவான அறிவுரைகள்

*படிவம் 7—ஐ யார் தாக்கல் செய்யலாம் ?*

1. வாக்காளர் பட்டியலின் ஒரு பாகத்தில் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு பெயருக்கு ஆட்சேபணை தெரிவிப்பதற்கோ அல்லது அந்த வாக்காளர் பட்டியலின் பாகத்தில் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ள ஒரு பெயரை நீக்கக் கோருவதற்கோ, அந்த வாக்காளர் பட்டியலில் முன்னரே பெயர் சேர்க்கப்பட்டுள்ள ஒரு நபர் மட்டுமே இப்படிவத்தினை தாக்கல் செய்ய முடியும்.

*படிவம் 7 எப்போது அளிக்கப்படலாம் ?*

1. தொகுதியின் வாக்காளர் பட்டியலின் வரைவு வெளியீட்டிற்குப் பிறகு அப்பட்டியலில் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு பதிவுக்கு தெரிவிக்க இவ்விண்ணப்பத்தைத் தாக்கல் செய்யலாம். கோரிக்கைகளையும் ஆட்சேபணைகளையும் தாக்கல் செய்வதற்கென வரையறுக்கப்பட்ட காலகட்டத்தில் விண்ணப்பத்தைத் தாக்கல் செய்ய வேண்டும். வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி அறிவிக்கப்பட்ட பின்பு மேற்குறிப்பிட்ட காலஅளவைப்பற்றி உரிய அளவில் விளம்பரம் செய்யப்படும்.

2. விண்ணப்பத்தின் ஒரே ஒரு பிரதியை மட்டுமே தாக்கல் செய்ய வேண்டும்.

3. பெயரை நீக்குவதற்கான விண்ணப்பத்தை ஆண்டு முழுவதும் (திருத்தப் பணிகள் நடைபெறாத காலம் உட்பட) தாக்கல் செய்யலாம். திருத்தப்பணி நடைபெறாத காலங்களில் விண்ணப்பத்தை இருபிரதிகளாக தாக்கல் செய்ய வேண்டும்.

*படிவம் 7—ஐ எங்கே தாக்கல் செய்வது ?*

1. திருத்தப்பணி நடைபெறும் காலத்தில் விண்ணப்பத்தை வரைவு வாக்காளர் பட்டியல் பார்வைக்கு வைக்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் (பெரும்பாலும் வாக்குச்சாவடி அமைவிடங்கள் / அஞ்சலகங்கள்) மற்றும் தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரி மற்றும் உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலங்களிலும் தாக்கல் செய்யலாம்.

2. வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி நடைபெறாத , ஆண்டின் மற்ற காலங்களில் விண்ணப்பத்தை வாக்காளர் பதிவு அதிகாரியிடமோ, குறிப்பிட்ட மற்ற அலுவலகங்களிலோ தாக்கல் செய்யலாம்.

*படிவம் 7—ஐ எப்படி நிரப்புவது ?*

1. ஒரு தொகுதியின் வரைவு வாக்காளர் பட்டியலில் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு பதிவுக்கு அதே வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டுள்ள இன்னொரு வாக்காளர் ஆட்சேபணை தெரிவிக்க அத்தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பத்தை முகவரியிட வேண்டும். காலியாக உள்ள இடத்தில் தொகுதியின் பெயர் நிரப்பப்பட வேண்டும்.

2. <u>பெயர் சேர்க்கப்பட ஆட்சேபிக்கப்படுபவரின் விவரங்கள்/பதிவு நீக்கப்படவேண்டியவரின் விவரங்கள்</u>:
இரண்டு மாற்று விருப்பத் தேர்வுகளில் முதலாவது விருப்பத்தேர்வு வாக்காளர் பட்டியல் திருத்தத்தின் போது வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டபின் பொருந்தக் கூடியது. அதாவது வாக்காளர் பட்டியல் இறுதி வெளியீட்டின்போது ஆட்சேபிக்கப்பட்ட பதிவு நீக்கல் பட்டியலில் காட்டப்பட வேண்டும். இரண்டாவது விருப்பத் தேர்வு இறுதிப்பட்டியல் வெளியீட்டிற்கு பின்னர் நடைபெறும் தொடர் திருத்தக் காலத்தில் பொருந்தக்கூடியது. அதாவது இறுதிவாக்காளர் பட்டியலில் முன்பே சேர்க்கப்பட்ட பதிவை நீக்குவதற்கானது (விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது பொருத்தமற்ற மாற்று விருப்பத் தேர்வை அடித்து விடவும்)

   சேர்ப்பதற்கு ஆட்சேபிக்கப்படுகின்ற அல்லது நீக்கக்கோரப்படுகின்ற நபரின் பெயருடன் பிற விவரங்களான வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் சேர்க்கப்பட்டுள்ள பாகத்தின் எண், அந்தப்பாகத்தில் அவரது வரிசை எண், வழங்கப்பட்டுள்ள வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண் போன்றவையும் நிரப்பப்பட வேண்டும். இந்த விவரங்கள் வாக்காளர் பட்டியலின் உரிய பாகத்தில் உள்ளன. வாக்காளர் பட்டியலின் வலது மேல்பக்க மூலையில்

பாகத்தின் எண் அச்சிடப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பதிவுக்கும் ஒரு வரிசை எண் கொடுக்கப்பட்டிருக்கின்றது. வாக்காளர் பட்டியலில், சேர்ப்பதற்கு ஆட்சேபிக்கப்படுகின்ற அல்லது நீக்கப்படக் கோரப்படுகின்ற நபரின் வரிசை எண்ணைச் சரிபார்த்து எழுதவும். ஒருவேளை அந்நபருக்கு அடையாள அட்டை ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தால் அதன் எண்ணும் பதிவுக்கு எதிரில் அச்சிடப்பட்டிருக்கும் அந்த அடையாள அட்டை எண்ணையும் கொடுக்கப்பட்ட இடத்தில் முழுமையாக குறிப்பிட வேண்டும்.

சேர்ப்பதற்கு ஆட்சேபம்/நீக்கக் கோருதல் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் ஒவ்வொரு பதிவுக்கும் தனித்தனியே அளிக்கப்பட வேண்டும்.

3. ஆட்சேபிப்பவரின் விவரங்கள்

"ஆட்சேபிப்பவர்" வாக்காளர் பட்டியலின் எந்த பாகத்தில் தன்னுடைய பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்த பாகத்தில் பெயர் சேர்க்கப்பட்டுள்ள நபர்களுக்காக மட்டுமே படிவம் 7–ஐத் தாக்கல் செய்ய முடியும். விண்ணப்பத்தின் பகுதி II-ல் ஆட்சேபிப்பவர் தன்னுடைய பெயர், குடும்பப் பெயர், உறவினரின் பெயர் (தந்தை/தாய்/கணவர்), பாலினம், வாக்காளர் பட்டியலில் அவர் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள பாகத்தின் எண், அந்த பாகத்தில் அவரது வரிசை எண் ஆகியவற்றையும் நிரப்ப வேண்டும்.

விண்ணப்பத்தின் பகுதி III-ல் ஆட்சேபிப்பவர் தன்னுடைய முழுமையான முகவரியை அதற்கென வழங்கப்பட்டுள்ள இடத்தில் நிரப்ப வேண்டும்.

4. ஆட்சேபணைக்கான/ நீக்குவதற்கான காரணங்கள்

விண்ணப்பத்தின் பகுதி IV-ல் 'ஆட்சேபிப்பவரான' விண்ணப்பதாரர் ஆட்சேபிக்கப்படும் நபர் என்ன காரணத்திற்காக (அதாவது இறப்பு, இடமாற்றம், பதிவு செய்துள்ள முகவரியில் சாதாரணமாக வசிக்காமை முதலியன) வாக்காளர் பட்டியலின் அந்த பாகத்தில் பெயர் சேர்க்கப்படத் தகுதியில்லாதவர் என்பதைக்குறிப்பிட வேண்டும். பெயரை நீக்கக் கோருவதற்கான காரணத்திற்கு ஆதாரத்தைக்காட்ட வேண்டிய பொறுப்பு ஆட்சேபிப்பவரைச் சார்ந்தது.

5. உறுதி மொழி

விண்ணப்பத்தின் பகுதி V-ல் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் தனக்குத் தெரிந்தவகையிலும், நம்பிக்கைக்கு உகந்த வகையிலும் உண்மை என உறுதியளிக்க வேண்டும். தயவு செய்து, கொடுத்துள்ள முகவரியில் எந்த தேதியிலிருந்து வசித்து வருகிறீர்கள் என்பதைக் குறிப்பிடவும். தவறான உறுதிமொழியைக் கொடுத்தல் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950, பிரிவு 31ன் கீழ் தண்டிக்கப்படத்தக்கது.